Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No.447/2019**

**Deposition of PW.5 (LW.6)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேல்முருகன் | ஜாதி | : | |
| த/பெ | : | அண்ணாமலை | தொழில் | : | மதுரை வனக்கோட்டம், சோழவந்தான் வனச்சரகம், சமயநல்லூர், வனவர் |
| கிராமம் | : | காட்டுநாயக்கன்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | நிலக்கோட்டை | வயது | : | 52/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2025.

(1, 2 மற்றும் 4 எதிரிகள் ஆஜர், 3வது எதிரி இறந்துவிட்டார்)

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சமயநல்லூரில் வனவராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 22.11.2016 அன்று இரவு 10.30 மணியளவில் வனச்சரக அலுவலருக்கு வந்த ரகசிய தகவலின் பேரில் வனவர்கள் மற்றும் வனக்காப்பாளர்கள் கன்னிவாடி வனச்சரகம், கன்னிவாடி பிரிவு, கன்னிவாடி பிளாக் 1, வைகை பார்ம்ஸ் அருகில், சாத்தாரப்பன் கோவில் பகுதியில் இரவு கண்காணிப்பு பணி மேற்கொண்டிருக்கும் போது, எதிரிகள் மயில்கூட்டம் ஒன்று வந்ததை பார்த்து துப்பாக்கியால் சுட்டதில் ஒரு ஆண் மயிலும், ஒரு பெண் மயில் சிறு காயத்துடன் அடிபட்ட நிலையில், இறந்த ஆண் மயிலை தோலை உரித்து கறிகளாக வெட்டும் போது மறைந்து இருந்து எதிரிகளை கையும், கலவுமாக பிடித்து, பொருட்களையும் கைப்பற்றி இரவு சுமார் 01.00 மணியளவில் வனச்சரக அலுவலகத்திற்கு எதிரிகளை விசாரணைக்காக கொண்டு வந்து வனச்சரக அலுவலர் முன் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆஜர் எதிரிகளை எனக்கு நன்றாக தெரியும்.

எதிரி மைக்கேல் என்பவர் என்னிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். சாட்சிகள் தெய்வ சர்மா, ராஜு, சரவணன் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். எதிரி யோவான், சோவியத்து ராஜா, குணசேகரன் ஆகியோர் தனித்தனியாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள். சாட்சிகள் ராஜு, சரவணன், சங்கர் மற்றும் என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதில் நான் சாட்சி கையொப்பம் போட்டேன். மேற்படி 3 எதிரிகளின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

மேற்படி எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் யோவானிடம் இருந்து உரிமம் இல்லாத நாட்டு துப்பாக்கி ஒன்று, கைபேசி, இரண்டு சக்கர வாகனம் ஒன்று, நெற்றி லைட், கருமருந்து 50 கிராம், ஈயத்துகள்கள் 200 கிராம், தீப்பெட்டி, அரிவாள், கத்தி ஆகியவை கைப்பற்றப்பட்டது. பின்னர் எதிரி சோவியத்து ராஜா என்பவரிடம் இருந்து கைபேசி,

இருசக்கர வாகனம், நெற்றி லைட் ஆகியவை கைப்பற்றப்பட்டது. பின்னர் எதிரி மைக்கேலிடம் இருந்து கைபேசி ஒன்று, நெற்றி லைட் ஆகியவை கைப்பற்றப்பட்டது. எதிரி குணசேகரன் என்பவரிடமிருந்து கைபேசி, இருசக்கர வாகனம், மயில் கறி ஆகியவை கைப்பற்றப்பட்டது. வழக்கு சம்மந்தமாக வனச்சரக அலுவலர் என்னை விசாரித்தார்.

<u>**1, 2** எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் பற்றி உங்களுக்கு எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது என்றால் இரவு 10.30 மணிக்கு தகவல் கிடைத்தது. நீங்கள் யார் யார் உடன் எந்த வாகனத்தில் சம்பவ இடத்திற்கு சென்றீர்கள் என்றால் வனச்சரக அலுவலர், வனவர், வனக்காப்பாளர் ஆகியோருடன் ஜீப் வாகனத்தில் சென்றோம். ஒப்புதல் வாக்குமூலம் எங்கு வைத்து, எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்றால் வனச்சரக அலுவலகத்தில், வனச்சரக அலுவலர் முன்னிலையில் அதிகாலை 02.00 மணியளவில் தயார் செய்யப்பட்டது.

நீங்கள் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல 3வது எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் தரவில்லை என்றும், நீங்களாகவே தயார் செய்துவிட்டு பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. சான்று பொருட்கள் எந்த வாகனத்தில் வனச்சரக அலுவலகத்திற்கு கொண்டு வரப்பட்டது என்றால் ஜீப் வாகனத்தில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் கொண்டுவரப்பட்டது. நாங்கள் இருசக்கர வாகனத்தில் வனச்சரக அலுவலகத்திற்கு சென்றோம். நீங்கள் சொல்வது போல் எந்த சான்று பொருட்களையும் எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்படவில்லை என்றும், வழக்கிற்காக நீங்களாகவே சான்று பொருட்களை தயார் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**4** வது எதிரியின் வழக்கறிஞர் ஆஜர் இல்லை**, 4**வது எதிரி சார்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று அனுமானிக்கப்படுகிறது**.**

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor